IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, SANKARI.

**SC.No**.178/2022 **Date**:20.03.2024.

அ.சா.1-ரத்தினவேல்

சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கு சம்பந்தமாக சங்ககிரி போலீசார் என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் 2 முறை விசாரித்தார்கள். முதலில் சங்ககிரி GH லும், பின்பு ஈரோடு தனியார் மருத்துவமனையிலும் விசாரித்தார்கள். எனக்கு தமிழ் எழுத, படிக்க தெரியும். நான் சங்ககிரி GH ல் வாக்குமூலம் கொடுத்த போது சுயநினைவுடன் தான் இருந்தேன். அப்போது எனக்கும் பக்கத்து நிலத்துக்காரர் பங்காளி குமாரசாமி என்பவருக்கும் பொதுவாக 40 செண்ட் நிலம் பாககறார் செய்யாமல் உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த விவரத்தை நான் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதை நான் திட்டமிட்டு தான் மறைத்தேன் என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிகளுக்கும் இடையே சிவில் வழக்கு எதுவும் இல்லை என்றால் சரிதான். பாகம் பிரித்து தரும் படி நான் எதிரிகளுக்கு வக்கீல் நோட்டீசும் அனுப்பவில்லை என்றால் சரிதான். பாககறார் சம்பந்தமாக எனக்கும் எதிரிகளுக்கும் அடிக்கடி தகராறு வந்த போது நான் இதற்கு முன்பு போலீஸ் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என் தாத்தா பெயர் நடேசகவுண்டர். அவருடன் பிறந்த சகோதரர் பெயர் கைலாச கவுண்டர் மற்றும் வெங்கடபெருமாள். இளையப்பகவுண்டருக்கு நடேசகவுண்டர், கைலாச கவுண்டர் மற்றும் வெங்கடபெருமாள் ஆகியோர் மகன்கள். என் அப்பா நடேசகவுண்டரின் மகன் என்றால் சரிதான். 1 ம் எதிரி வெங்கடபெருமாளின் மகன் என்றால் சரிதான். 2, 3 எதிரிகள் 1 ம் எதிரியின் மகன்கள். இளையப்பகவுண்டரின் 3 மகன்களுக்கு இடையே 26.11.1981 ல் எழுத்து மூலமான பதிவு செய்யப்பட்ட பத்திரத்தின் மூலம் பாகம் பிரிவினை நடைபெற்றது என்றால் சரிதான். அதில் A,B,C செட்டியூல்கள் என 3 ஆக பாகம் பிரிக்கப்பட்டது என்றால் அதில் எனக்கு உடன்பாடு இல்லை. அதில் எனக்கும் சேர்த்து தான் என் அப்பா கையெழுத்து செய்துள்ளார் என்றால் சரியல்ல. A,B,C செட்டியூல்கள் படி குடும்ப சொத்து சரிசமமாக பாகம் பிரித்து தனிதனியாக அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. 26.11.1981 ல் எழுத்து மூலமான பதிவு செய்யப்பட்ட பத்திரம் செல்லாது என்று நானும் என் அப்பாவும் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதனால் 40 செண்ட் நிலத்திற்காக வழக்கு சம்பவம் நடைபெற்றது என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் சம்பவத்திற்கு தொடர்பு இல்லாத சொத்தின் ஆவணங்களான 1. பாக பிரிவினை பத்திரம், 2. பட்டா நகல், 3. 2016ல் அ.சா.1 அனுப்பிய வழக்கறிஞரின் அறிவிப்பு, 4. அந்த அறிவிப்புக்கு எதிரிகள் அனுப்பிய பதில் அறிவிப்பு, 5. சம்பவத்திற்கு பிறகு 2020 டிசம்பர் மாதம் அ.சா.1 எதிரிகளிடம் வாங்கிய பொது அதிகார பத்திரத்தின் நகல், 6. அந்த பொது அதிகார பத்திரத்தை பயன்படுத்தி அ.சா.1 சொத்தை 3ம் நபருக்கு விற்பனை செய்த கிரைய ஆவண நகல் ஆகியவற்றை சாட்சியிடம் காண்பித்து கேள்வி எழுப்பி நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்க முயற்சி செய்ததால் அந்த ஆவணத்திற்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் உள்ள தொடர்பு பற்றியும் நீதிமன்றம் கேள்வி எழுப்பிய போது அவர் இந்த வழக்கை வேறு நீதிமன்றத்தில் நடத்தி கொள்வதாக தெரிவித்தார். அதனால் அவர் சாட்சியை தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்ய முயற்சிக்கவில்லை. அதனால் இந்த சாட்சியின் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

Sd/-ரத்தினவேல்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி